# பொன்னேரி நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் **2022** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **25.11.2022** வெள்ளிக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் **.**

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் அக்டோபர் **2022** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு**:- மன்றம் அனுமதி அளிக்கலாம்
நகர்மன்ற தீர்மாண எண்:138 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: பதிவு செய்யப்படுகிறது .**

**பொருள் எண் 2**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (Ms) எண்.**129,** நாள்.**23.09.2022** - ல் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23 ன்கீழ் ரூ.**33.00** இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்-**22** சர்வே எண் 201/10, 202 /1B ல் உள்ள அப்துல் கலாம் நகர் பூங்காவில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று **22.11.2022** அன்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் **1015/2022** / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:139 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 3**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (Ms) எண்.**18,** நாள்.**21.10.2022** - ல் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23 ன்கீழ் ரூ.**31.00** இலட்சம் மதிப்பீட்டில் சின்னக்காவணம் பகுதியில் உள்ள போத்திராஜா குளத்தினை புனரமைத்தல் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று **22.11.2022** அன்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் **1015/2022** / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 140 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 4**

பொன்னேரி நகராட்சியில் உள்ள 1257 எண்ணிக்கையிலான குழல் விளக்குகள், 634 எண்ணிக்கையிலான CFL தெருமின்விளக்குகளை மின் சேமிப்பின் அவசியம் மற்றும் பயனீட்டு மின்கட்டணங்களை குறைக்கும் வகையில் LED தெருமின் விளக்குகளாக மாற்றியமைக்கவும் அவற்றிற்கான Single Phase, Three Phase Controller Switches-ஐ பொருத்தவும் மதிப்பீடு தொகை ரூ.117.98 இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியின்கீழ் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயலாணைகள் கடிதம் ந.க. எண் 31028/2022/ MA1 நாள். 14.10.2022 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 14.12.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 860/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 141 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது .**

**பொருள் எண் 5**

பொன்னேரி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021-22 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை ரூ.12.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயலாணைகள் கடிதம் ந.க. எண் 27519 – 54 / 2021 / P2 நாள். 4.11.2022 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 30.11.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 13 & 14 | தண்டபாணி நாடார் தெரு மற்றும் அதாவுல்லாஷா தெரு சந்திப்பில் 12மீ உயரமுள்ள சிறியவகை உயர்மின் கோபுர விளக்கு அமைத்து 6 எண்ணிக்கையிலான 150 W திறன் கொண்ட LED மின்விளக்குகள் பொருத்துதல் | 4.20 |

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2. | 14 & 21 | நீலிஅப்பாதுரை தெரு மற்றும் இரட்டைமலை சீனிவாசனார் சாலை சந்திப்பில் 12மீ உயரமுள்ள சிறியவகை உயர்மின் கோபுர விளக்கு அமைத்து 6 எண்ணிக்கையிலான 150 W திறன் கொண்ட LED மின்விளக்குகள் பொருத்துதல் | **4.20** |
| 3. | 5 | சின்னக்காவணம் சந்திப்பில் 12மீ உயரமுள்ள சிறியவகை உயர்மின் கோபுர விளக்கு அமைத்து 6 எண்ணிக்கையிலான 150 W திறன் கொண்ட LED மின்விளக்குகள் பொருத்துதல் | **4.20** |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 388 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 142 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது .**

<u>பொருள் எண் 6</u>

பொன்னேரி நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் ( Tied Grant ) 2021-22 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை ரூ. 62.18 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயலாணைகள் கடிதம் ந.க. எண் 31112 / 2021 / CFC நாள். 12.10.2022 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 30.11.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | வார்டு எண். | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 5 | சின்னக்காவணம் பகுதியில் உள்ள மயான பூமிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 22.00 |
| 2. | 7 (ம) 22 | மூகாம்பிகை நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்திற்கு (80 மீ) சுற்றுச்சுவர், பம்ப்ரூம் அமைத்தல் மற்றும் பாலாஜி நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்திற்க்கு பம்புரூம் அமைத்தல். | 17.00 |
| 3. | 7 | கள்ளுக்கடைமேடு சுடுகாட்டில் ஈமச்சடங்கு கூடம் மற்றும் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல் | 10.00 |
| 4. | 12 (ம) 15 | வள்ளலார் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் சுற்றுச்சுவர் பழுதுபார்த்தல், பம்புரூம் அமைத்தல் மற்றும் டி.எச்.ரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் பழுதுபார்த்தல், பம்புரூம் அமைத்தல். | 7.30 |

| வ. எண் | வார்டு எண். | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 5. | 19, 22 (ம) 24 | மூகாம்பிகை நகர், பாவேந்தர் தெருக்களில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளுக்கு 7.5 HP திறன் கொண்ட மின்மோட்டார் மற்றும் வார்டு எண்.19–ல் உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றிக்கு 5 HP திறன் கொண்ட மின்மோட்டார் சப்ளை செய்து பொருத்துதல். | 3.30 |
| 6. | 15, 21 (ம) 19 | நாடார் ரைஸ் மில் தெரு, தேவாத்தம்மன் நகர் மற்றும் ஆண்டவர் தெருக்களில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் 10 HP திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் மாற்றியமைத்தல். | 2.58 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 02 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 143 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 7**

பொன்னேரி நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்ட காலத்தில் அனைவருக்கும் வீடு வழங்கம் திட்டம் செயல்பட்டு வந்தது. மேற்படி திட்டத்தில் 174 பயனாளிகள் பயன்பெற்று வந்தனர். இதில் 95 பயனாளிகள் பணியினை முடித்து தொகையினை பெற்றுவிட்டனர். மீதமுள்ள 79 பயனாளிகளுக்கு இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் திட்டம் செயல்படுத்தப்படும் எனவும் அவர்கள் மூலமே தொகைகளும் விடுவிக்கப்படும் எனவும் உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் கடித ந.க.எண். 281/EC/Tvlr/2022 நாள் 17.06.2022 வாயிலாக தெரிவிக்கப்பட்டு மேற்படி 174 பணியாளர்கள் விவரம் மற்றும் அவர்களின் ஆவண நகல்கள் ஆகியவற்றை வழங்கி ஒப்படை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயனாளிகளின் விவரம் மற்றும் அவர்களின் ஆவண நகல்களை ஜெராக்ஸ் எடுத்து வழங்கிட இவ்வலுவலகத்தில் ஜெராக்ஸ் இயந்திரம் இல்லாததால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று விலைப்புள்ளிகள் பெற்று சிறப்பு அறிவிக்கைகள் ( Special Notice ) அச்சிட்டு பெற்றுக்கொள்ளவும், இதற்கான தோராய செலவினம் ரு.50,000/- வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 541/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 144 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 8**

பொன்னேரி நகராட்சியில் 2022-2023 ம் ஆண்டு பொதுநிதியின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **15.11.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில் ) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கியுள்ள மழைநீரினை அப்புறப்படுத்த வாடகை அடிப்படையில் ஜேசிபி சப்ளை செய்தல் | **6.00** | ஏ.டி.சந்தானம், டி.வி.புரம், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கரையில் உடைப்பு ஏற்பட்டால் வெள்ளநீர் உட்புகாமல் தடுக்க மணல் மூட்டை சப்ளை செய்தல் | **2.00** | ஏ.டி.சந்தானம், டி.வி.புரம், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரினை அப்புறப்படுத்த மின்மோட்டார் மற்றும் ஆயில் என்ஜின் சப்ளை செய்தல் | **7.00** | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | எல்.ஜி.அரசு, பெரும்பேடு | மதிப்பீட்டை விட குறைவு |
| 4 | மழையினால் சேதமடைந்த சாலைகளில் தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **9.00** | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | எஸ். பிரகாஷ், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**( ந.க.எண் 951/2022 / அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 145 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 9**

பொன்னேரி நகராட்சி அலுவலகத்தில் நகர் மன்ற கூடத்திற்கு மைக்செட், ஸ்பீக்கர் வசதி செய்திடவும், குடிநீர் பராமரிப்பு , தெருமின்விளக்கு பராமரிப்பு இருப்பு பொருட்களுக்கு இருப்பு அறை அமைத்திடவும், CCTV கேமராவிற்கு LED திரை அமைக்கவும், அலுவலகத்திற்கு தேவையான இதர வசதிகளை செய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**4.00** இலட்சத்திற்கு பொதுநிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**(** ந.க.எண் **1048/2022** / அ**1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 146 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது .**

**பொருள் எண் 10**

பொன்னேரி நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு அச்சம் ஏறுபடுத்தும் வெறிநாய்களை பிடிக்கவும் மற்றும் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து விடவும், பொதுமக்கள் , வார்டு உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும் சாலைகளில் இரவு பகல் நேரங்களில் மாடுகள் படுத்துக்கொள்வதால் விபத்துகள் ஏற்படுவதாகவும், புகார் மனுக்கள் வருவதால் மேற்படி நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்திடவும், சாலைகளில் உள்ள மாடுகளை பிடித்து அவற்றின் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கவும், மேற்படி பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**(** ந.க.எண் **324/2022** / அ**1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 147 நாள்: 25.11.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது .**

ஒம்**)** கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.